# மரியன்னை புகழ் நாமம் தினம் பாடுவோம்

மரியன்னை புகழ் நாமம்
தினம் பாடுவோம்
மனமெல்லாம் மகிழந்தாடக் கொண்டாடுவோம் - ( 2 )
இரவென்றும் பகலென்றும் நம் வாழ்விலே
இடர் நின்று துயர் வென்று
இனிமை கொண்டால்
அவள் நாமமே தினம் வாழ்கவே
நாமெல்லாம் ஒன்றாக

( மரியன்னை )

**1)**
அன்பின் தேனருவி அதனில் நானுருகி
அன்னை மரியாளின் புகழ் பாடுவேன்
என்னை இன்றளவும் கண்ணின் இமையெனவே
அன்னை திருநாமம் காப்பாற்றிட
யுகங்களே..
யுகங்களே வா வா
மாதாவைப் பாட

( மரியன்னை )

**2)**
அந்த வான் நிலவும் இந்த பூவுலகும்
அன்னை திருநாமம் தினம் பாடுதே
கண்ணில் காணுகின்ற காட்சி யாவிலுமே
கருணை உருவாக அவள் தோன்றிட
யுகங்களே..
யுகங்களே வா வா
மாதாவைப் பாட

( மரியன்னை )